மாலை முரசு

பக்கங்கள் 15

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 புரட்டாதி 19 வெள்ளிக்கிழமை 06.10.2023 அதிர்வு 67

## இளைஞர் ஒருவர் சுட்டுப் படுகொலை



இளைஞர் ஒருவர் சுட்டுப் படுகொலை செய் யப்பட்டுள்ளார்.

04

# கொழும்பில் கோரம்

## பஸ் மீது மரம் முறிந்து வீழ்ந்ததில் ஐவர் சாவு

### 12 பேர் காயங்களுடன் வைத்தியசாலையில்



கொழும்பு, கொள்ளுப்பிட்டி - டுப்ளி கேஷன் வீதியில் இ.போ.ச. பஸ் மீது பாரிய மரமொன்று முறிந்து வீழ்ந்ததில் ஐவர் பரிதாபகரமாகச் சாவடைந் துள்ளனர்.

இன்று காலை 6 மணியளவில் இடம்பெற்ற இந்த அனர்த்தத்தில் காயமடைந்த 17 பேர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட னர்.

04





## நஸீர் ‘அவுட்’

(விவரம் 3ஆம் பக்கத்தில்)



## மற்றொரு பஸ் விபத்தில் 22 பயணிகள் படுகாயம்



இலங்கை போக்கு வரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸுடன் கென்டேனர் மோதி ஏற்பட்ட விபத்தில் பயணி கள் 22 பேர்

04

## பாடசாலை பஸ்ஸும் இன்று காலை விபத்து

### 15 மாணவர்கள் காயம்

பாடசாலை பஸ் ஒன்றும் இன்று காலை விபத்துக்குள்ளாகி யுள்ளது.

குறித்த பஸ்ஸும் இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸும் நேருக்கு நேர் மோதியுள்ளது.

04

AARI WORK, SAREE BLOUSE AND SHALWAR வகுப்புகளுக்கு



புதிய மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படும்

இலங்கையில் பிரசித்திபெற்ற தையல் கலைஞர் Shamala Jayaratnam

அவர்களால் October மற்றும் November மாதங்களில்

Aari work | Saree Blouse | Shalwar

வகுப்புகள் கனடாவில் நடாத்தப்படவுள்ளன.

Whatsapp
+1 (647) 856-6080

Chinese Cultural Centre Of Greater Toronto, (Parking Lot Entrance via Progress Ave), 5183 Sheppard Ave E, Scarborough, Ontario - M1B 5Z5





## மயிலத்தமடு மேய்ச்சல் தரைப் பிரச்சினைக்கு நீதி கோரி

# கூட்டமைப்பு எம்.பிக்கள் சபையில் ஆர்ப்பாட்டம்!

மட்டக்களப்பு, மயிலத்தமடு மேய்ச்சல் தரை பண்ணையாளர்களுக்கு நீதி வழங்கக் கோரி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபையில் இன்று திடீரென முன்னெடுத்த போராட்டத்தால் அங்கு அமைதியின்மை ஏற்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், அம்பாறை மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற த.கலையரசன், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோநோகராதலிங்கம், யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் ஆகியோர் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதன்போது ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கும் போராட்டத்தில் ஈடுபட்ட எம்.பிக்களுக்கும் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டதால் சபையில் அமைதியின்மை ஏற்பட்டது.

நாடாளுமன்றம் இன்று முற்பகல் 9.30 மணிக்குக் குழுக்களின் பிரதித் தலைவர் அங்கஜன் இராமநாதன் தலைமையில் கூடியது. பிரதான நடவடிக்கைகளைத் தொடந்து, சபையில் விசேட கூற்றை முன்வைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி. இராசமாணிக்கம் சாணக்கியன், மயிலத்தமடு – மாதவனைப் பகுதியில் பண்ணையாளர்கள் முன்னெடுக்கும் போராட்டம் தொடர்பில் கருத்துக்களைத் தெரிவித்து, “எமது நிலம் எமக்கு வேண்டும்”, “எமது வளம் எமக்கு வேண்டும்”, மகாவலி “அதிகார சபை கெடுபிடிகளை நிறுத்து” என்று கோஷங்களை எழுப்பியும் பதாகையை ஏந்தியவாரும் சபைக்கு நடுவே சென்றார்.இதன்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏனைய எம்.பிக்களும் அவ்விடத்துக்கு வந்ததுடன் கைகளில் “மயிலத்தமடு மக்களுக்கு வேண்டும்”, “மகாவலி ஆக்கிரமிப்பை நிறுத்து” என்று எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு சபாபீடத்துக்கு முன்னால் சென்று ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இதன்போது சபைக்குத் தலைமை தாங்கிய நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் அங்கஜன் இராமநாதன், “உங்கள் பிரச்சினையைச் சம்பந்தப்பட்டவர்களுக்குத் தெரிவிக்கின்றோம். சபையின் தினப் பணிகளுக்கு இடமளியுங்கள்” – என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் பல தடவைகள் கோரிக்கை விடுத்தார்.

எனினும், அவர்கள் தொடர்ந்தும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட நிலையில், சபை முதல்வரான அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, “விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் சபையில் இல்லை. அது தொடர்பில் அமைச்சருடன் கலந்துரையாடலாம்” – என்று கூறினார். இதன்போது சபை முதல்வருடன் சாணக்கியன் எம்.பி. வாக்குவாதத்தில் ஈடுபட்டார்.

இவ்வேளையில் ஆளும் கட்சி உறுப்பினர் பிரேமநாத் சீ தொலவத்த, சாணக்கியன் எம்.பியை நோக்கி “பேசாமல் போய் அமருங்கள்” என்று கூச்சலிட்டார். அவரை நோக்கிப் பதிலளித்த சாணக்கியன் எம்.பி., “நாங்கள் எங்கள் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் போராடுகின்றோம். தேவையில்லாத விடயத்தில் நீங்கள் தலையிடாது உங்களின் வேலையைப் பாருங்கள்” என்று கூறினார். இதன்போது சபையில் அமைதியின்மை ஏற்பட்டது.


இதேவேளை, இராஜாங்க அமைச்சரான சிவநேசதுரை சந்திரகாந்தன் சபையில் இருந்ததுடன், அவர் நடப்பவற்றை நின்றபடி பார்த்துக்கொண்டிருந்தார்.

அத்துடன் தமிழ் முற்போக்குக் கூட்டணி எம்.பி. வீ.இராதகிருஷ்ணனும் சபை நடுவே சென்று சிறிது நேரம் கூட்டமைப்பு எம்.பிக்களுடன் நின்றுவிட்டு பின்னர் தனது ஆசனத்துக்குச் சென்று அமர்ந்துகொண்டார்.



கூட்டமைப்பு எம்.பிக்கள் தொடர்ந்தும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட நிலையில், சபையின் தினப் பணிகளுக்கு இடையூறு செய்ய வேண்டாம் என்றும், ஆசனங்களில் சென்று அமருமாறும் சபைக்கு தலைமை தாங்கிய நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் அங்கஜன் இராமநாதன் அடிக்கடி வலியுறுத்திய நிலையில், சபை முதல்வர் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, “மயிலத்தமடு மேய்ச்சல் தரை பண்ணையாளர்களின் பிரச்சினையைச் சம்பந்தப்பட்ட அமைச்சருக்குத் தெரிவித்து தீர்வைப் பெற்றுத் தருவோம்” – என்று உறுதியளித்ததைத் தொடர்ந்து, அவர்கள் ஆர்ப்பாட்டத்தை முடித்துக்கொண்டு தமது ஆசனங்களில் சென்று அமர்ந்தனர்.

# நஸீர் 'அவுட்'



## முஸ்லிம் காங்கிரஸிலிருந்து அவரது வெளியேற்றம் சட்ட ரீதியானது என உயர் நீதிமன்றம் இன்று தீர்ப்பு

### நாடாளுமன்ற உறுப்புரிமையை இழக்கும் நிலை

அமைச்சர் நஸீர் அஹமட்டை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிலிருந்து நீக்கியமை சட்ட ரீதியில் வலுவானது என மூன்று நீதியரசர்களைக் கொண்ட உயர் நீதிமன்ற ஆயம் இன்று தீர்ப்பு வழங்கியது.

அதனால் அந்தக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு நாடாளுமன்றத்துக்குத் தெரிவான நஸீர் அஹமட் தமது நாடாளுமன்ற உறுப்புரிமையையும், அமைச்சர் பதவியையும் இழக்க வேண்டிய நிலைக்கு உள்ளாகியுள்ளார்.நீதியரசர் பிரீதி பத்மன் சூரசேன தலைமையில் நீதியரசர்கள் எஸ்.துரைராஜா, மஹிந்த சமயவர்த்தன ஆகியோரைக் கொண்ட ஆயம் இந்த வரலாற்றுத் தீர்ப்பை வழங்கியது.

கட்சியின் தீர்மானத்தை மீறி 2021 டிசம்பர் 10ஆம் திகதி அரசாங்கத்தின் வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக மூன்றாவது வாசிப்பின் மீது வாக்களித்த நஸீர் அஹமட்டை கட்சியின் அடிப்படை உறுப்புரிமையில் இருந்து நீக்கும் முடிவை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உயர் பீடம் எடுத்து அறிவித்திருந்தது.

அதற்கு எதிராக நஸீர் அஹமட் சார்பில் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை உயர் நீதிமன்றம் இன்று தள்ளுபடி செய்தது.

இந்த வழக்கில் கட்சியையும், கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம், ஏனைய மூத்த தலைவர்கள், செயலாளர் நிஸாம் காரியப்பர் மற்றும் உயர் பீட உறுப்பினர்கள் என 90 பேரை எதிர்மனுதாரர்களாக மனுதாரர் நஸீர் அஹமட் குறிப்பிட்டிருந்தார்.

சஞ்சீவ ஜெயர்த்தன, ருஷாந்த கூரே, ருக்ஷான் சேனாதிர, புண்ணியஜித் துனுசிங்க ஆகியோர் மனுதாரர் சார்பில் முன்னிலையாகி வாதிட்டனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அதன் தலைவர் ரவூப் ஹக்கீம், செயலாளர் நிஸாம் காரியப்பர் ஆகியோர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், சட்டத்தரணிகளான விரான் கொரயா, அனி குலநாயகம், திக்ஷ்ய மாஸ்கரங்கே ஆகியோரின் அனுசரணையுடன் முன்னிலையானார்.

கலாநிதி ரொமேஷ் டி சில்வா உட்படப் பலர் ஏனைய மனுதாரர்களுக்காக முன்னிலையாகினர்.

நஸீர் அஹமட் உட்பட கட்சியில் நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சி முடிவை மீறி, மேற்படி வரவு - செலவுத் திட்டத்தை ஆதரித்து வாக்களித்தனர். இது தொடர்பில் கட்சி உயர் பீடத்தால் அவர்களிடம் விளக்கம் கோரப்பட்டது. நஸீர் அஹமட்டைத் தவிர மற்றைய மூவரும் விளக்கம் அளித்தனர்.

அதனால் அவர்கள் கட்சியில் இருந்து அன்றைய நிலையில் இடைநிறுத்தம் மட்டுமே செய்யப்பட்டனர். விளக்கம் அளிக்கத் தவறிய நஸீர் அஹமட் கட்சியிலிருந்து நீக்கப்பட்டார்.

மற்றைய மூவரினதும் விளக்கத்தை ஏற்றுக்கொண்ட கட்சியின் உயர்பீடம் அவர்களின் இடைநிறுத்தத்தை பின்னர் நீக்கி அவர்களைக் கட்சிக்குள் உள்வாங்கிக் கொண்டது.

கட்சியிலிருந்து தம்மை நீக்கியமையை ஆட்சேபித்து நஸீர் அஹமட் தாக்கல் செய்த மனு இப்போது நிராகரிக்கப்பட்டுருக்கின்றது.

அதனால் கட்சியிலிருந்து அவர் வெளியேற்றப்பட்டமை சட்ட ரீதியில் சரியானது என உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்து விட்டது.

கட்சி உறுப்பினர் பதவியை சட்டப்படி அவர் இழந்திருப்பதால், அக்கட்சி மூலம் தெரிவான நாடாளுமன்ற உறுப்பினர் பதவியையும், அதை இழப்பதால் அமைச்சர் பதவியையும் அவர் இழக்க வேண்டி நேர்ந்துள்ளது.

இதையடுத்து மட்டக்களப்பு மாவட்டத்தின் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பான புதிய நாடாளுமன்ற உறுப்பினராக முன்னாள் இராஜாங்க அமைச்சர் அலிஸாஹிர் மௌலானா நியமனம் பெறுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

## "இலங்கை அரசே சட்டவாட்சியைப் பாதுகாக்க நீதித்துறைச் சுதந்திரத்தை உடன் உறுதி செய்"

### யாழில் இன்றும் கவனவீர்ப்புப் போராட்டம்

(எஸ்.நிதர்ஷன்)



முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி. சரவணராஜாவுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்குக் குரல் கொடுக்கும் வகையில் கவனவீர்ப்புப் போராட்டம் யாழ்ப்பாணத்தில் இன்று முன்னெடுக்கப்பட்டது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தின் யாழ்ப்பாணம் பிராந்திய அலுவகத்தின் முன்பாக காலை 10 மணியளவில் இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

"இலங்கை அரசே சட்டவாட்சியைப் பாதுகாக்க நீதித்துறைச் சுதந்திரத்தை உடனடியாக உறுதி செய்க" என வலியுறுத்தி போராட்டக்காரர்கள் பதாகைகளை தாங்கி நின்றனர்.சட்டத்துக்கும் மனித உரிமைக்குமான நிலையத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் சட்டத்தரணிகள், மனித உரிமைகள் ஆர்வலர்கள், சிவில் சமூகத்தினர் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி. சரவணராஜா உயிர் அச்சுறுத்தல் மற்றும் அழுத்தம் காரணமாகப் பதவியில் இருந்து விலகி நாட்டை விட்டு வெளியேறிச் சென்றுள்ள நிலையில் அதற்கு அரசு நடவடிக்கை எடுக்காமையைக் கண்டித்து போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# உலக குடியிருப்பு தின நிகழ்வுகள் மன்னாரில்




(மன்னார் நிருபர்)

உலக குடியிருப்பு தின நிகழ்வுகள் மன்னாரில் இடம்பெற்று வருகின்றன.

கடந்த 2 ஆம் திகதி ஆரம்பமான இந்த நிகழ்வுகள் எதிர்வரும் 9 ஆம் திகதி வரை தேசிய ரீதியில் நெகிழ்வான நகர்ப்புற பொருளாதாரம் எனும் தொனிப்பொருளில் முன்னெடுக்கப்படுகின்றது.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் பிரதான பங்களிப்புடன் பல்வேறு செயல்பாடுகளை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

மன்னார் மாவட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையில் கடந்த 2 ஆம் திகதி திங்கள் காலை தேசிய கொடி ஏற்றி உலக குடியிருப்பு வார நிகழ்வுகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

மன்னார் ஜிம் பிறவுண் இந்தியன் வீட்டுத்திட்டம் மற்றும் பற்றிமா நகர் 1 மற்றும் பற்றிமா நகர் 11 இந்தியன் வீட்டுத் திட்டங்களில் சிரமதானம், மரநடுகை மற்றும் போதைவஸ்து விழிப்புணர்வு கருத்தமர்வு முன்னெடுக்கப்பட்டன.

மன்னார் பட்டித்தோட்டம் வயோதிப இல்லத்தில் வாழும் மூத்தோரை சந்தித்து அவர்களை மகிழ்ச்சிப் படுத்தி அவர்களுக்கு சிற்றுண்டி வழங்கும் நிகழ்வும் இவ்வாரத்தில் நிகழ்ந்தது.

தொடர்ந்து வரும் நாள்களில் கடந்த 2021 மற்றும் 2022 இல் ஆரம்பிக்கப்பட்ட மானிய வீடமைப்பு வேலைத் திட்டத்துக்கான மிகுதி கொடுப்பனவுகள் பயனாளிகளுக்கு வழங்கி வைக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### இளைஞர் ஒருவர்...

இந்தச் சம்பவம் குருநாகல், அம்பன் பொல – திம்பிரியாவ பகுதியில் நேற்று இரவு இடம்பெற்றுள்ளது.

குறித்த பகுதியில் வீடொன்றில் நடைபெற்ற மதுபான விருந்தில் ஏற்பட்ட வாய்த் தர்க்கத்தை அடுத்து இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

திம்பிரியாவ பகுதியில் வசிக்கும் 27 வயதுடைய நபரே துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிச் சாவடைந்துள்ளார்.

வீட்டு உரிமையாளரால் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

---

### பஸ்மீது...

அவர்களில் 5 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பில் இருந்து தெனியாய நோக்கிப் பயணித்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் மீதே இவ்வாறு மரம் முறிந்து வீழ்ந்தது.

பஸ்ஸில் சிக்கியவர்களை மீட்கும் முயற்சியில் பொலிஸாரும், விமானப் படையினரும் ஈடுபட்டனர்.

இந்த அனர்த்தத்தால் அந்தப் பகுதியில் கடும் வாகன நெரிசல் ஏற்பட்டது.

இதையடுத்து கொள்ளுப்பிட்டி – டுப்ளிகேஷன் வீதி தற்காலிகமாக மூடப்பட்டது. அந்த வீதியைப் பயன்படுத்தும் சாரதிகளுக்கு மாற்று வழிகளைப் பயன்படுத்துமாறு பொலிஸார் அறிவுறுத்தினர். முறிந்து வீழ்ந்த மரம் அகற்றப்பட்டதன் பின்னர் டுப்ளிகேஷன் வீதி மக்கள் போக்குவரத்துக்காக மீண்டும் திறக்கப்பட்டது.

---

### மற்றொரு பஸ் விபத்தில்...

காயமடைந்துள்ளனர்.

இந்தச்சம்பவம் இன்று அதிகாலை 5 மணியளவில் நிட்டம்புவ, கஜுகம பகுதியில் இடம்பெற்றுள்ளது.

அம்பாறையில் இருந்து பயணித்த பஸ்ஸே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் காயமடைந்த 22 பேரும் வத்துபிட்டிவல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் 4 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது என்று வைத்தியசாலை வட்டாரம் தெரிவித்தது.

---

### பாடசாலை பஸ்ஸும்...

இதன்போது பாடசாலை பஸ்ஸில் பயணித்த 15 மாணவர்கள் காயமடைந்துள்ளனர்.

குளியாப்பிட்டி, ஹெட்டிபொல – கரந்திப்பல பிரதேசத்தில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில் காயமடைந்தவர்கள் குளியாப்பிட்டி போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# முல்லைத்தீவு மாவட்டம் மீது குறிவைக்கும் தென்னிலங்கை!

## நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவிப்பு



முல்லைத்தீவு மாவட்டம் தென்னிலங்கை இனவாதிகள், பௌத்த பிக்குகளால் குறி வைக்கப்படுகின்றது என்று நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

முல்லைத்தீவில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் தெரிவித்துள்ளவை வருமாறு–

குருந்தூர் மலை தொடர்பான தீர்ப்பை மாற்ற வேண்டும் என்று அழுத்தங்கள் , உயிர் அச்சுறுத்தல் பிரயோகிக்கப்பட்டுள்ளதால் நீதிபதி நாட்டைவிட்டுச் சென்றிருக்கிறார் என்பது அனைவரும் அறிந்த உண்மை.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் பகிஷ்கரிப்பதென்பது ஒரு விடயம். ஆனால் அவர்களுடைய பதவிகளை ராஜினாமா செய்வதென்பது என்னைப் பொறுத்த மட்டிலே சாலச் சிறந்ததாக இருக்காது.

ஏனென்றால் ஒட்டுமொத்தமாக ராஜினாமா கடிதத்தை கொடுக்க வேண்டும். ஆனால் தற்போது இருக்கும் சூழலில் இது முடியாத காரியம்.

முல்லைத்தீவு மாவட்டம் தென்னிலங்கை இனவாதிகள், பௌத்த பிக்குகளால் குறி வைக்கப்படுகின்றது.

இவ்வாறு குறிவைக்கப்படும் சூழலில் நாங்கள் இந்த விடயத்தைச் செய்வோமாக இருந்தால் நாடாளுமன்றத்துக்குப் பிரச்சினைகளைக் கொண்டு செல்வதற்கான வாய்ப்புகள் அற்றுப் போகும். சர்வதேசத்திடம் உரிமையோடு கேட்கும் விடயங்கள் அனைத்தும் கேட்க முடியாத சூழல் உருவாகும். பகிஷ்கரிக்கும் விடயத்தில் மீள் பரிசீலனை செய்யலாம். ஆனால் நிலங்கள் பறிபோய்க் கொண்டிருக்கும் சூழலில் தட்டிக்கேட்கின்ற, நிறுத்துகின்ற வழிகளை கையாளுகின்ற ஒரு சூழல் சாத்தியமற்றது என்பது என்னுடைய கருத்து.

ஏனென்றால் தென்னிலங்கையில் இருக்கும் இனவாதிகள் கூடுதலாகப் பௌத்த பிக்குகள் எங்களுடைய பூர்வீகத்தை ஒழிப்பதற்காக தமிழர்கள் வாழ்ந்தார்கள் என்ற வரலாற்றை சிதைப்பதற்காக முழு மூச்சோடு செயற்பட்டு வருகின்றனர். இந்த நிலையிலே நாடாளுமன்றத்தை துறந்தோமாக இருந்தால் நிலத்தையோ, மக்களுடைய பிரச்சினைகளையோ தட்டிக்கேட்கும் நிலைமை அல்லது சர்வதேசத்திடம் எடுத்து சொல்கின்ற நிலமைகள் சற்று மாறாக அமைந்துவிடும்.

ஆகவே இந்த விடயம் இந்தக் கால கட்டத்தில் சரியானதொன்று அல்ல என்பது என்னுடைய கருத்து.–என்றார்.



# கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வுப் பணி நிறுத்தப்படும் நிலையில்

## சட்ட வைத்திய அதிகாரி வாசுதேவா தெரிவிப்பு

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வுப் பணி நிறுத்தப்படும் சூழலே காணப்படுகின்றது என்று சட்ட வைத்திய அதிகாரி க. வாசுதேவா தெரிவித்துள்ளார்.

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வு பணி மீண்டும் ஆரம்பிக்கப்படாமல் நிறுத்தப்படக் கூடிய சூழலே காணப்படுகிறது.

மீண்டும் அகழ்வுப் பணிகள் எப்போது ஆரம்பிக்கப்படும்? ஏற்கனவே எடுக்கப்பட்ட 17 உடற்கூற்றுக்கான பரிசோதனை முடிவுகள் எப்போது கிடைக்கப்பெறும் என்று முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி கனகசபாபதி வாசுதேவவுடன் நேற்று (05) தொடர்பு கொண்டு வினவிய போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்–

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் உள்ள பிரதான கணக்காளர் நிதி இல்லை என்று நேற்றைய தினம் (04) கூறியுள்ளார். இந்த நிலையில் அகழ்வு பணி நிறுத்தப்படக் கூடிய சூழலே காணப்படுகிறது. உடற் கூற்று பரிசோதனை முடிவுகளும் தாமதமாவதற்கான சாத்திக் கூறுகளே உள்ளன.– என்றார்.

முல்லைத்தீவு – கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் அகழ்வாய்வு நடவடிக்கைகள் கடந்த மாதம் செப்ரெம்பர் 6 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு செப்ரெம்பர் 15வரை இடம்பெற்றிருந்தன.

இந்த அகழ்வுப் பணியில் 17 எலும்புக் கூட்டு தொகுதிகள் மீட்கப்பட்டன. இதனையடுத்து அகழ்வுப்பணியானது இடைநிறுத்தி வைக்கப்பட்டது.

ஒக்ரோபர் மாதம் மூன்றாம் வாரமளவில் இதே குழுவால் மீள ஆரம்பிக்கப்படும் என்று முல்லைத்தீவு சட்ட வைத்திய அதிகாரி கனகசபாபதி வாசுதேவா ஊடகங்களுக்கு முன்னர் கருத்துத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## வரலாற்றுத் தீர்ப்பு!

*இலங்கையின் அரசியல் வரலாற்றில் மிக மிக முக்கியமான தீர்ப்பு ஒன்றை உயர்நீதிமன்றம் இன்று வழங்கியிருக்கின்றது. நினைத்தபடி அணி மாறி, பல்டி அடித்து, ஜனநாயகத்தையே கேலிக்கூத்தாக்கும் அரசியல்வாதிகளின் பித்தலாட்டங்களை நீதித்துறை எந்நேரமும் பார்த்துக் கொண்டிராது என்பதை வெளிப்படுத்துமாற் போல இந்தத் தீர்ப்பு வந்திருக்கிறது.*

*1978 இல் தற்போதைய அரசமைப்பு கொண்டு வரப்பட்ட போது ஒரு கட்சியில் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினரானவர் கட்சி அல்லது அணி மாறி, அந்த எம்.பி. பதவியில் இலகுவில் நீடிக்க முடியாது என்ற இறுக்கமான கட்டுக்கோப்பு ஏற்பாடுகள் இருக்கத்தான் செய்தன.*

*அப்போது தமிழர் விடுதலைக் கூட்டணியின் மட்டக்களப்புத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் செல்லையா இராஜதுரை அரசு பக்கம் தாவி அமைச்சரானார். அவரது நாடாளுமன்ற பதவியை தக்க வைப்பதற்காக ஜனாதிபதி ஜே.ஆர. ஜெயவர்த்தனவின் வழிகாட்டலில் அரசமைப்புத் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன. அப்போதிருந்தே இந்தப் பிரச்சினை ஆரம்பமாகி விட்டது. 1977 இல் ஐந்தில் ஆறு பெரும்பான்மையுடன் ஆட்சியைக் கைப்பற்றிய ஜெயவர்த்தன அடுத்த 11 ஆண்டுகள் தாம் ஆட்சியில் இருந்த காலம் முழுவதும் அந்தப் பெரும்பான்மையைத் தக்க வைத்திருந்தார். அதைப் பயன்படுத்தி தம் இஷ்டப்படி - தம் தேவைப்படி - தம் வசதிப்படி - அரசமைப்புத் திருத்தங்களை மேற்கொண்டார்.*

*அதற்குப் பின்னர் நீதி பரிபாலனத்தில் இருந்த சில நீதியரசர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கட்சித் தாவல்கள் குறித்து குசும்புத்தனமான உத்தரவுகளை காலத்துக்கு காலம் வழங்கி, கட்சித் தாவல் அநாகரிகங்கள் கேவலமாக அரங்கேற வழி செய்தனர்.*

*அதன் பின்னர் இவ்வளவு காலமும் நாடாளுமன்றத்தில் நடந்த நரக நடவடிக்கைகள் - அலங்கோலங்கள் - ஜனநாயகத்தின் மாண்பைக் கேவலப்படுத்தும் அநாகரிகங்கள்.*

*எதிர்த்தரப்பு கட்சியின் சார்பில் தேசியப் பட்டியல் எம்.பி. நியமனத்தைப் பெற்று, காலையில் எம்.பியாக சத்தியப் பிரமாணம் செய்தவர் நண்பகலில் அரசுப் பக்கம் தாவி, உடனடியாகவே பிரதி அமைச்சர் ஆகப் பதவியேற்ற சம்பவம் கூட நடந்தது.*

*ஒப்பீட்டளவில் இந்தக் குத்துக்கரணங்கள் முஸ்லிம் எம்.பிக்கள் மத்தியிலேயே அதிகம்.*

*அத்தகைய போக்குக்குச் சரியான 'செக்மேட்' வைத்து ஜனநாயக விழுமியங்களைப் பேண வழிகாட்டி இருக்கின்றது உயர் நீதிமன்றத் தீர்ப்பு.*

*இப்படிக் கட்சி மாறி பல்டி அடிக்கும் எம்.பிக்கள் தொடர்பில் உரிய சட்ட முறையில் - தகுந்த வழிமுறைகளைப் பின்பற்றி - சரியான நடவடிக்கைகளைக் காலம் தவறாமல் கட்சி எடுத்தால் கட்சிக்கு நீதி கிட்டும் என்பதை உயர் நீதிமன்றம் உறுதிப்படுத்தி இருக்கின்றது.*

*முஸ்லிம் காங்கிரஸ் எம்.பியாகத் தெரிவு செய்யப்பட்ட பின்னர் அரசு பக்கம் தாவி அமைச்சரான நஸீர் அஹமட்டை கட்சியிலிருந்து விலக்கும் நடவடிக்கையை பிரபலமான சட்டத்தரணி நிஸாம் காரியப்பரை செயலாளராகக் கொண்ட முஸ்லிம் காங்கிரஸ் சரியான ஒழுங்கு முறைப்படி முன்னெடுத்தது. அதன் விளைவு உயர் நீதிமன்றத்தின் இந்த வரலாற்று முக்கியத்துவம் மிக்க தீர்ப்பு. மற்ற கட்சிகள் இந்தப் பாடத்தை முன்னுதாரணமாகக் கொள்வது நல்லது.*

## மட்டக்களப்பு சந்திவெளியில் பாம்பு தீண்டி மாணவன் பலி!

**(பழுவூரான்)**

மட்டக்களப்பு சந்திவெளிப் பகுதியில் பாம்பு தீண்டியதால் 12 வயது பாடசாலை மாணவன் உயிரிழந்துள்ளார்.

வந்தாறுமூலை விஷ்ணு மகா வித்தியாலயத்தில் எட்டாம் தரத்தில் கல்வி பயிலும் மாணவனான கந்தசாமி டிலக்‌ஷன் என்ற மாணவனே பாம்பு தீண்டி உயிரிழந்தவராவார்.

பாடசாலை விடுமுறை நாள்களில் தனது பெரியப்பாவின் சந்தனமடு ஆறு பிரதேசத்திலுள்ள தோட்டத்துக்குச் சென்று தங்கி நின்று வீடு திரும்பும் இவர், கடந்த சனியன்று (30) பெரியப்பாவுடன் சந்தனமடு ஆறு தோட்டத்துக்குச் சென்று, ஞாயிறன்று கடுமையான மழை பெய்ததால் வீடு திரும்ப முடியாமல் அங்கேயே இருந்துள்ளார்.

திங்கட்கிழமை இரவு தோட்டவாடியில் உறங்கிக் கொண்டிருந்த இவருக்கு திடீரென வயிற்று நோவுடன் வாந்தியும் ஏற்பட்டுள்ளது.

மாவடிவேம்பு பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில் செவ்வாய்க்கிழமை (03) உயிரிழந்துள்ளார்.

தனது பிள்ளைக்கு என்ன நடந்தது என்றே தெரியவில்லை என்று தந்தை, திடீர் மரண விசாரணை அதிகாரி எம்.எஸ்.எம்.நஸீரிடம் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் மரணத்துக்கான காரணத்தைக் கண்டறிய பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

பிரேத பரிசோதனையில் மாணவனின் வலது காலின் மேல் பாகத்தில் பாம்பு தீண்டியதால் குருதியோட்டத்தில் நஞ்சு கலந்து இதயம் செயலிழந்து மரணித்திருப்பது கண்டறியப்பட்டது.

பின்னர் சடலம் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது.

## சர்வதேச ஆசிரியர் தினத்தில் அன்பளிப்புக்குத் தடை விதிப்பு!

**(நூருல் ஹுதா உமர், யூ.கே. காலித்தீன்)**

சர்வதேச ஆசிரியர் தினத்தில் அன்பளிப்புப் பொருள்களுக்குத் தடை விதித்தது சாய்ந்தமருது அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலை.

பாடசாலை அதிபர் எம்.ஐ.எம். இல்யாஸ் இது தொடர்பில் அறிவிப்பை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளவை வருமாறு–

வருடா வருடம் ஒக்ரோபர் 6 ஆம் திகதி எமது நாட்டில் ஆசிரியர் தினம் அனுஷ்டிக்கப்படுகின்றன. இத்தினத்தில் மாணவர்கள் ஆசிரியர்களுக்கு தனியாகவும், குழுக்களாகவும் அன்பளிப்புப் பொருள்களை வழங்கி வருகின்றனர்.

இதனால் வகுப்பறைகளில் வறிய மாணவர்கள் பல்வேறு விதமான மன உளைச்சலுக்கும் சவால்களுக்கும், ஏற்றத்தாழ்வுகளுக்கும் முகங்கொடுக்கின்றனர்.

அதேவேளை இன்றைய பொருளாதார நெருக்கடிகளுக்கும் மத்தியில் பெற்றோர்களாகிய நீங்களும் பல சங்கடங்களுக்கு உட்படுகின்றீர்கள்.

எனவே, கடந்த வருடத்தைப் போன்று இவ்வருடமும் ஆசிரியர் தினத்தில் ஆசிரியர்களுக்கோ அல்லது அதிபருக்கோ எந்தவிதமான அன்பளிப்புப் பொருள்களையும் இரகசியமாகவோ அல்லது பரகசியமாகவோ வழங்குவதற்கு பாடசாலை முகாமைத்துவக் குழு தடைவிதித்துள்ளது.

மீறுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். உங்களது ஆசிரியர் தின அன்பளிப்புக்கள் எமது ஆசிரியர்களின் தேக ஆரோக்கியத்துக்காகவும் நீடித்த ஆயுளுக்காகவும் பிரார்த்தனைகளாக அமையட்டும் – என்று தெரிவித்துள்ளார்.



## திடீரென சுகவீனமடைந்த பஸ் சாரதி

# பயணியின் துரித செயற்பாட்டால் காப்பாற்றப்பட்டுள்ள 70 உயிர்கள்!

கண்டியில் இருந்து கொழும்பு நோக்கி 70 பயணிகளுடன் பயணித்த தனியார் பேருந்தின் சாரதி திடீரென சுகவீனமடைந்துள்ளார்.

இந்த நிலையில் பேருந்து கட்டுப் பாட்டை இழந்துள்ளது.

பேருந்தில் பயணித்த பயணி ஒருவர் விரைந்து செயற்பட்டுபிரேக்கை அழுத்தி பேருந்தை நிறுத்தியுள்ளார். இதன் காரணமாக 70 பேரின் உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளன.

பேருந்தில் திடீரென சுகவீனமடைந்த சாரதி பேராதனை போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந் துள்ளார்.

உயிரிழந்தவர் கம்பஹா பகுதி யைச் சேர்ந்த சமிந்த பிரபாத் சரத்சந்திர என்ற 49 வயதுடையவர் எனவும் அவர் பேருந்தின் உரிமையாளர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பேராதனை வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி நிலாந்தி நில வலவால் பிரேதப் பரிசோதனை மேற் கொள்ளப்பட்டது. மாரடைப்பு காரணமாக மரணம் ஏற்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

சம்பவத்தின் போது பேருந்தில் பயணித்த பேராதனை போதனா வைத் தியசாலையின் பிரதான பாதுகாப்பு அதிகாரி துஷார பிரதீப் வீரகோன் கூறியதாவது–

“மாலை வேலை முடிந்து சுமார் 6.40 மணியளவில் பேராதனையிலிருந்து பேருந்தில் ஏறினேன். பேருந்தில் அனைத்து இருக்கைகளும் நிரம்பியி ருந்தன. சுமார் 30 பேர் நின்று பயணித் தனர்.

திடீரென அலறல் சத்தம் கேட்டது. முன்னால் சென்று பார்த்தபோது சாரதி ஆசனத்தில் இருந்தவர் ஒரு பக்கம் சாய்ந்து கிடந்தார். அவரது கட்டுப்பாட்டை மீறி பேருந்து நகர்ந்து கொண்டிருந்தது.

இதன் போது பேருந்தில் இருந்த ஒருவர் வந்து சாரதி இருக்கையை நோக்கி சாய்ந்து பிரேக்கை கையால் அழுத்தி பேருந்தை நிறுத்தினார்.

பேருந்தில் ஒரு மருத்துவரும் பய ணித்த நிலையில் அவர் சாரதிக்கு அடிப் படை சிகிச்சை அளித்து, நோயாளியை விரைவில் மருத்துவமனைக்கு அழைத் துச் செல்லுமாறு கேட்டுக் கொண்டார்.

ஓட்டோவில் அவரை பேராதனைக்கு அழைத்து வந்தேன். சில மணி நேரங் களுக்குப் பிறகு அவர் இறந்துவிட்டார் என்பது எங்களுக்குத் தெரிந்தது.

இந்தப் பேருந்து கடுகன்னாவ வளைவுக்கு அருகில் சென்றடைந்த போது சாரதிக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டிருந்தால் பெரும் அசம்பாவிதம் நடந்திருக்கும்.

சரியான நேரத்தில் சக பயணி எடுத்த நடவடிக்கையால் 70 பேரின் உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளன” – என்று தெரிவித் துள்ளார்.

# ஒருவரது உயிரைக் காவு கொண்ட வீதியில் ஏற்பட்ட வாய்த் தர்க்கம்!



குருநாகல் தம்புள்ளை பிரதான வீதியில் இருவருக்கு இடையில் ஏற்பட்ட வாக்குவாதம் முற்றி ஒருவர் மற்றவரை தள்ளியதில் அந்த நபர் வீதியில் விழுந்து வாகனத்தில் மோதுண்டு உயிரிழந்துள்ளார்.

அப்போது வீதியில் பயணித்துக் கொண்டிருந்த ஹன்டை னர் லொரி மீது மோதியே இந்த நபர் உயிரிழந்துள்ளார்.

குருநாகல் தம்புள்ளை பிரதான வீதியின் தோரயாய பிர தேசத்தில் நேற்று பிற்பகல் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

சாஹிது மொஹமட் என்ற 50 வயதுடைய நபரே உயிரி ழந்துள்ளார்.

விபத்து தொடர்பில், பதுளை பிரதேசத்தைச் சேர்ந்த கொள்கலன் பாரவூர்தியின் சாரதி, சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இறந்தவர் தோரயாய பகுதியைச் சேர்ந்த நபருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தின் பின்னர் இறந்தவருடன் சண்டையிட்டவர் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார் என்றும் சந்தேக நபரை கைது செய்ய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நீர்நிலைகளில் விலங்குக் கழிவுகள்:

# கொட்டுவோரைக் கண்டறிவதற்கு கோரப்படுகிறது மக்களின் உதவி!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை மாநகர சபைக்குட்பட்ட நீர் நிலைகள் மற்றும் பொது இடங்களில் ஆடு, மாடு, கோழிக் கழிவு– களைக் கொட்டி, சூழலை மாசுபடுத்துபவர்களை கைது செய்து, தண்டிப்பதற்கு பொது மக்கள் ஒத்துழைப்பு வழங்க முன்வர வேண்டும் என்று மாநகர சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

சிலர் உடனுக்குடன் தமது வீட்டுக் கழிவுகளை அகற்றி விட வேண்டுமென்பதற்காக பொறுப்பற்ற முறையில் பொது இடங்களிலும் தெருவோரங்களிலும் கழிவுகளை வீசிவிட்டுச் செல்கின்றனர்.

அது மாத்திரமன்றி சாய்ந்தமருது கரைவாகு பொலிவேரியன் வீட்டுத்திட்டத்தைச் சூழவுள்ள குளங்கள், கல்முனை கிரீன்பீல்ட் வீட்டுத் திட்டத்துக்குப் பின்னாலுள்ள ஆற்றங்கரைப் பகுதிகள் மற்றும் தோணாப் பகுதிகள் உள்ளிட்ட நீர் நிலைகளில் ஆடு, மாடு, கோழிக் கழிவு களையும் இதர குப்பைகளையும் கொட்டி வருகின்றனர்.

சட்டத்தை மதிக்காமலும் பொதுநலன் சார்ந்த உணர்வு எதுவும் இல்லாமலும் செய்யும் இந்த ஈனச் செயல் மிகவும் கண்டிக்கத்தக்கதும் தண்டனைக்குரியதுமான குற்றமாகும்.

சில ஈனப்பிறவிகளின் கண்டிமூடித்தனமான இச்செயற் பாடுகளால் கல்முனை மாநகரப் பகுதிகள் மாசுபட்டு, துர்நாற்றம் வீசுகிறது. இதனால் முழு மாநகருக்கும் பொது மக்களுக்கும் அவப்பெயர் ஏற்படுத்தப்படுகின்றது.

ஆகையால், இனிவரும் நாள்களில் இவ்வாறு கழிவு களையும் ஏனைய குப்பைகளையும் கொட்டுபவர்களைக் கண்டறிந்து, கைது செய்வதற்கும் அவர்கள் மீது சட்ட நடவ டிக்கை எடுப்பதற்கும் மக்கள் முன்வர வேண்டும் என்று கல்முனை மாநகர சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

# ஆசிரியர் தினத்தையொட்டி ஆசிரியர்கள் இரத்த தானம்!





**(மன்னார் நிருபர்)**

ஆசிரியர் தினத்தை முன்னிட்டு மன்னார் அல்-அஸ்ஹர் மகா வித்தியாலயதேசியபாடசாலையில்கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் இணைத்து புதன்கிழமை (4) காலை பாடசாலையில் இரத்ததானம் செய்துள்ளனர்.

மன்னார் அல்-அஸ்ஹர் மகா வித்தியாலய தேசிய பாடசாலையின் சென். ஜோன்ஸ் கழகம் மற்றும் சுகாதார கழகம் இணைந்து ஏற்பாடு செய்த இரத்ததான முகாம் பாடசாலை அதிபர் எம்.வை.மாஹிர் தலைமையில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் இரத்த வங்கியின் உதவியுடன் இடம்பெற்ற இரத்ததான முகாமில் பாடசாலையில் கல்வி கற்பிக்கும் சுமார் 20 ஆசிரியர்கள் இரத்ததானம் செய்தனர்.

# பேசாலையில் சிறுவர் தினம்



**(மன்னார் நிருபர்)**

மன்னார் பேசாலை சென் மேரிஸ் மகா வித்தியாலய சிறுவர்கள் உலக சிறுவர் தினத்தைக் கொண்டாடினர்.

பேசாலை புனித வெற்றி நாயகி ஆலயத்தில் இடம்பெற்ற விசேட திருப்பலியைத் தொடர்ந்து சிறுவர்கள் வர்ண ஆடைகள் அணிந்து கையில் பலூன்களை ஏந்தியவாறு ஆலயத்தில் இருந்து ஊர்வலமாக சென்றனர்.

ஊர்வலத்தில் கலந்து கொண்ட சிறுவர்கள் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு சென்றனர்.

'போதை ஊட்டாதீர்கள், போதையை நிறுத்துங்கள், நல்ல பாதையை காட்டுங்கள், சிறுவர் எமது உரிமையை மதியுங்கள், சிறப்பான வாழ்வை எமக்கு அழியுங்கள், எங்கள் கனவுகள் மெய்ப்பட விடுங்கள், எங்கள் உலகை எங்களுக்கு கொடுங்கள், எல்லாவற்றையும் விட பிள்ளைகள் பெறுமதியானவர்கள், சட்டவிரோத சம்பாத்தியம் உமக்கு வேண்டாம் , சாபமும் பாவமும் எனக்கு வேண்டாம்' உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு பேசாலை புனித வெற்றி நாயகி ஆலயத்தில் இருந்து பிரதான வீதி வழியாக சுமார் ஒன்றரைக் கிலோ மீற்றர் தூரம் கிராமப்புற வீதியூடாக சென்மேரிஸ் பாடசாலையை சென்றடைந்தனர்.

மன்னார் மாவட்ட பகுதியில் போதைப் பொருள் கடத்தல் மற்றும் பாவனை அதிகரித்து காணப்படும் நிலையில் சிறுவர்களால் விழிப்புணர்வு ஊர்வலம் முன்னெடுக்கப்பட்டது.

இதேவேளை, சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டுச் சிறுவர்களை பாடசாலை ஆசிரியர்கள் பான்ட் வாத்தியம் இசைத்து அழைத்துச் சென்றனர்.

# முல்லைத்தீவு செயலகத்தில் சிறுவர், முதியோர் நிகழ்வு!





முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் சிறுவர் மற்றும் முதியோர் தின நிகழ்வு முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் அ. உமாமகேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

சிறுவர்களது உரிமைகளை பேணுவதற்காகவும், அவர்களை மகிழ்ச்சியான உலகுக்கு இட்டு செல்வதற்காகவும், எதிர்காலத்தில் நல்ல பிரஜைகளை உருவாக்குவதற்குமாகவே ஐக்கிய நாடுகள் சபையால் சிறுவர் தினம் பிரகடனப்படுத்தப்பட்டது.

முதியவர்கள் ஒரு நாட்டினுடைய சொத்துக்கள் அவர்களை பேணிப்பாது காக்க வேண்டும் என்பதற்காகவும் இதே தினம் முதியோர் தினமாகவும் கொண்டாடப்பட்டு வருகிறது.

இன்றைய தினம் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சிறுவர்கள் மற்றும் முதியவர்கள் கௌரவிக்கப்பட்டனர். சிறுவர் மற்றும் முதியோர்களுடைய கலை நிகழ்வுகளும் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வு நிலை சிரேஷ்ட போதனாசிரியர் திருமதி. கணேஸ்வரி இராஜசிங்கம் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் மாவட்ட மேலதிக அரச அதிபர் (நிர்வாகம்) க.கனகேஸ்வரன், மேலதிக மாவட்ட அரச அதிபர் (காணி) எஸ்.குணபாலன், மாவட்ட பதில் திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட பிரதம கணக்காளர், மாவட்ட உள்ளகக் கணக்காய்வாளர், உதவி மாவட்ட செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# வெல்லாவெளியில் சிறுவர் தினம்









**(வி.ரி.சகாதேவராஜா)**

வெல்லாவெளி கலைமகள் வித்தியாலய சர்வதேச சிறுவர் மற்றும் முதியோர் தின நிகழ்வுகள் அதிபர் ஆறுமுகம் புட்கரன் தலைமையில் நடைபெற்றன.

பிரதம விருந்தினராகக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் த.அருள்ராஜா கலந்து கொண்டார்.

கௌரவ விருந்தினராக இலங்கை வங்கி வெல்லாவெளி முகாமையாளர் திருமதி ப. ரமேஷ்கரன் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினராக போரதீவுப்பற்று சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர் அ. நவநிதி கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் உரைகளும் இடம்பெற்றன. முதியோர்கள் பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

வரவேற்புரையைப் பிரதி அதிபர் க.இராமகிருஷ்ணன் நிகழ்த்த நன்றியுரையை ஆசிரியை திருமதி யோ.கந்தசாமி வழங்கினார்.

# திருகோணமலையில் கஞ்சாவுடன் ஒருவர் கைது!

திருகோணமலை துறைமுகப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மகமாயப்புரம் பிரதேசத்தில் கேரளா கஞ்சாவுடன் நேற்று முன்தினம் மாலை (04) ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று துறைமுகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்டவர் போதை பழக்கம் உடையவர் என்றும் கேரளா கஞ்சாவை உபயோகிக்கும் நோக்கில்



அவரது உடமையில் மறைத்து வைத்திருந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவரிடம் இருந்து 420 மில்லிகிராம் கேரளா கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர் (34 ) வயதுடையவர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.





புதிய மாணவர் அனுமதி - 2023 செப்டம்பர் நுழைவு

UNDERGRADUATE DEGREE PROGRAMMES
COMPUTING | BUSINESS

SLIIT NORTHERN UNI யின் நான்கு வருட பட்டப்படிப்புகள்.
தற்போது யாழ்ப்பாணத்தில்,
கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டப்படிப்புகள்.

BSc(Hons) in Information Technology Specialising in :

- Information Technology
- Software Engineering
- Cyber Security
- Interactive Media
- Computer Systems & Network Engineering
- Information Systems Engineering
- Data Science

BBA(Hons) Specialising in :

- Business Analytics
- Marketing Management
- Accounting & Finance
- Logistics & Supply Chain Management

25% இற்கும் மேலான புலமை பரிசில்கள்

நினைவில் கொள்ள வேண்டிய திகதி

விண்ணப்ப முடிவுத்திகதி
5 OCT 2023

தகுதிகாண் பரீட்சை
7 OCT 2023
( 10:30மு.ப to 11:30மு.ப)

மொழி மூலம்
தமிழ், ஆங்கிலம், சிங்களம்

SLIIT | NORTHERN UNI
Call us now:
077 147 1471
northernuni.lk
apply@northernuni.com



# ‘அறிவும் ஆரோக்கியமும்’ நூல் வெளியீடு!

**(நூருல் ஹுதா உமர், றியாஸ் ஆதம், அஸ்ஹர் ஆதம், அபு அலா)**

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையால் முன்னெடுக்கப்படும் ஆயுர்வேத வைத்திய சாலைகளின் தரத்தை மேம்படுத்துவது தொடர்பான மீளாய்வு கூட்டம் புதன்கிழமை கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது

மீளாய்வு கூட்டத்தில் ஆயுள்வேத வைத்தியசாலைகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் சவால்கள் தொடர்பில் நேரடியாக கேட்டறியப்பட்டது.

ஆயுள்வேத வைத்திய துறையை மக்கள் மயமாக்கி அதனூடாக ஆயுள்வேத உற்பத்திகளை அதிகரிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மக்களுக்கு ஆயுள் வேதத்தின் மீதான நம்பிக்கையை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பாரம்பரிய மருத்துவம் பற்றிய ஆய்வுகளை செய்வதற்கு முன்வர வேண்டும் எனவும் இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

நிகழ்வில் ஒரு அங்கமாக கல்முனை பிராந்திய ஆயுள்வேத பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஏ.நபீல் ஒருங்கிணைப்பு செய்த நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் நிந்தவூர் மாவட்ட ஆயுள்வேத வைத்திய சாலையின் சமூகநல மருத்துவ உத்தியோகத்தர் திருமதி ஆர்.எப்.றிஸ்மியா எழுதிய ‘அறிவும் ஆரோக்கியமும்’ என்ற நூலே வெளியிட்டு வைக்கப்பட்டது

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதரன் பிரதம விருந்தினராகவும் கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தின் ஆணையாளர் வைத்திய கலாநிதி திருமதி ஆர்.ஸ்ரீதர் கௌரவ விருந்தினராகவும் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் எம்.பீ.அப்துல் வாஜித் விசேட விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

இதன்போது நூலின் முதல் பிரதியை நூலாசிரியர் றிஸ்மியா கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளருக்கு வழங்கி வைத்தார்.



# வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வவுனியாவில் ஆடுகள் வழங்கல்

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

விவசாய அமைச்சின் நிதி உதவியுடன் வவுனியா பிரதேச செயலக பிரிவில் உள்ள வறுமைக் கோட்டின் கீழ் உள்ளவர்களில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு ஆடுகள் வழங்கப்பட்டுள்ளன.

தெரிவு செய்யப்பட்ட 59 பயனாளிகளில் முதற்கட்டமாக 5 பயனாளிகளுக்கு தலா 75 ஆயிரம் ரூபா பெறுமதியான வளர்ப்புக்கான ஆடுகள் வழங்கப்பட்டன.

கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சரும், மாவட்ட அபிவிருத்தி குழு தலைவருமான காதர் மஸ்தான் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு ஆடுகளை வழங்கினார்.

# சிறுவர் தின ஊர்வலம்

**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

‘எல்லாவற்றிலும் பெறுமதியானவர்கள் சிறுவர்கள்’ எனும் தொனிப் பொருளில் இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் சிறுவர் தின ஊர்வலம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

பாடசாலையில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட ஊர்வலம் வலயக்கல்வி அலுவலகம் ஊடாக கல்முனை சந்தையை அடைந்து, கல்முனை பிரதான வீதியூடாக கல்முனை சதுக்கத்தை அடைந்து இஸ்லாமாபாத் வழியாக பாடசாலையை அடைந்தது.

சிறுவர்உரிமை, சிறுவர் துஷ்பிரயோகம், கல்வி, போதை வஸ்துப் பாவனை தொடர்பான பதாதைகள் ஏந்திவண்ணம் ஊர்வலக்காரர் காணப்பட்டனர்.

அதிபர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பாடசாலை ஆசிரியர்கள், அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் மற்றும் பெற்றோர்களும் கலந்து கொண்டனர்.





# மருத்துவமும் விளம்பரமும்...

வேகமாக இயங்கி வரும் இந்த மாறுபட்ட உலகை மனிதன் மாறுபட்ட கோணங்களில் தான் அணுக வேண்டும் . இந்த உலகமே ஒரு விதமான போட்டி சந்தை வியாபாரத்துக்குள்தான் இயங்கிக் கொண்டிருக்கின்றது. எல்லா பொருள்களும் அளவுக்கு மீறிய உற்பத்தி நுகர்வோடு வெளிவருகின்றது . எல்லாத் துறைகளுமே தொழில்நுட்பத்தால் வளர்ச்சி கண்டு மாறுபட்ட தொழில் உலகில் பிரவேசிக்க தொடங்கிவிட்டது.

உலகமே உள்ளங்கையில் என்பதை நாம் பல இடங்களில் தர்க்க ரீதியாகவும் சிந்திக்க வேண்டும். இது காலத்தின் படிமுறை வளர்ச்சி நிலை என்று சொன்னாலும் கூட அவை எம்மை எந்தப் பாதையில் அழைத்துச் செல்கின்றது என்பதை நாம் சற்றுக் கண் விழித்த நோக்க வேண்டும்.

விளம்பரம் என்பது ஒரு குறிப்பிட்ட பொருளை அதன் பெறுநர்களுக்கு கொண்டு சென்று சேர்ப்பதாகும். ஆனால் மருத்துவம் என்பது ஆரம்ப காலத்தில் இருந்தே ஒரு சேவையாகப் பார்க்கப்பட்டு வருகின்றது மருத்துவர்களை மக்கள் கடவுளுக்கு இணையாக பார்க்கும் உயரிய சேவை பிரமாணம் மிக்க துறையாக விளங்குகின்றது.

ஆயினும் சமீப காலங்களை எடுத்து நோக்கினால் மருத்துவத்துறையும் ஒரு மாதிரியான விளம்பரப்படுத்தல் போக்கோடு நகர்ந்து செல்வதை அவதானிக்க கூடியதாக இருக்கின்றது .

ஆரம்ப காலத்தை போல் அல்லாமல் இன்று மருத்துவமனைகள் சகல தொழில் நுட்ப வசதிகளுடன் கூடியதாகத் தான் நிர்மாணிக்கப்படுகின்றது. வெளி நாடுகளுக்கு சென்றுதான் சில நோய்களுக்கான சிகிச்சைகள் பார்க்க வேண்டும் என்ற நிலை மாறி இன்று உள் நாட்டிலேயே எல்லாவிதமான சிகிச்சைகளும் செய்யப்படுகின்றன.

எனினும் மருத்துவம் என்பது ஒரு சேவையாக இருந்தவரை எந்தவிதமான பிரச்சனைகளும் இல்லை. அது வணிகமாகித் தனியார் மருத்துவமனைகள் அதிகளவாக திறக்க தொடங்கிய பிறகு இந்த மருத்துவம் சார் விளம்பரபடுத்தல்கள் அதிகமாகி கொண்டு வருகின்றன.

அண்மைக் காலமாக சமூக வலைத்தளங்களிலும் இணையதளங்களிலும் மருத்துவ சிகிச்சைகள் மற்றும் மருத்துவர்கள் குறித்த விளம்பரங்கள் அதிக அளவில் வருவதை காணலாம். அது மட்டுமின்றி வீதிகளில் மக்களுக்கு துண்டு பிரசுரங்கள் வழங்கி தங்களது மருத்துவமனைகளை விளம்பரப்படுத்திக் கொள்கின்றார்கள். அதுமட்டுமின்றி சில விளம்பர துண்டு பிரசுரங்கள் வீடுகளுக்கே அனுப்பப்படுகின்றன. இன்னும் சில மருத்துவமனைகள் மருத்துவர்களின் விரும்பியோ விரும்பாமலோ அவர்களின் பெயர்களை குறிப்பிட்டு விளம்பரப்படுத்தல் போக்கும் சமீப காலமாகப் பெருகிக் கொண்டே செல்கின்றது.

இதன் விளைவு என்னவெனில் தரமான மருத்துவம் சரியான நோயாளிகளுக்குச் சென்றடைவதில்லை. மேலும் சமூக ரீதியாக குற்ற செயல்கள் அதிகரிக்கவும் வாய்ப்பு அதிகமாகிக் கொண்டே செல்கின்றது.

உதாரணமாகக் கூறுவதாயின் குழந்தையின்மைப் பிரச்சினையைக் கூறலாம். குழந்தையின்மைப் பிரச்சினைக்குத் தீர்வளிப்பதாகப் பல பொய்யான வாக்குறுதிகளை கூறி பண மோசடி செய்யும் நிலைமை அதிகரித்துள்ளது.

மேலும் குழந்தையின்மையில் தொடங்கிக் குணப்படுத்தவே முடியாத பல்வேறு நோய்களை ஒரே வாரத்தில் அல்லது ஒரு மாதத்தில் சரியாக்குவதாகப் பொய்யான விளம்பரங்கள் வெளியாகின்றன.

எனவே இந்த விளம்பரப்படுத்தலின் உச்ச நிலை விளைவாக கூறக்கூடியது என்னவென்றால் சமூகத்தில் போலி மருத்துவர்கள் அதிகமாக உருவாகுவதற்கு இது காரணமாக அமைகின்றது.

எந்த மருத்துவ தகுதிகளும் இல்லாத ஒருவர் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் பங்கேற்று மருத்துவம் தொடர்பான விளக்கம் அளிக்கின்றார். அவை மட்டுமின்றி சமூக வலைத்தளங்கள் வாயிலாகவும் இன்று போலி வைத்தியர்கள் அதிகமாகி உருவாகி வருவதை காணலாம்.

இவை மட்டுமன்றிச் சரியான அங்கீகாரம் இல்லாத பட்டப்படிப்புகள், தொலைதூரக் கல்வி மூலம் படித்தவர்கள், உறுதிப்படுத்தப்படாத சான்றிதழ் கற்கை நெறிகளைப் பயின்றோர் தங்களை மருத்துவர்கள் என அடையாளம் காட்டிக் கொண்டு தமது பட்டப் படிப்புக்களை தமது பெயருக்குப் பின்னால் இட்டுக் கொள்கின்றார்கள்.

எனவே இவ்வாறான செயற்பாடுகள் மக்கள் மத்தியில் ஒரு நம்பிக்கையை விளைவிக்கக் கூடியதாக இருக்கின்றது. அந்த மருத்துவர்கள் மருத்துவத்துறையில் புலமை பெற்றவர்கள் என மக்கள் அணி திரண்டு அவர்களுக்கு பின்னால் வரிசை கட்டி நிற்கக்கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது.

இன்னும் சில பொருள்கள் மருத்துவர்கள் பரிந்துரைப்பது போன்று சித்தரிப்பு காட்சிகளுடன் வெளி வருகின்றன. இதனை பெரும்பாலான மக்கள் நம்பி வாங்கக் கூடிய சூழல் காணப்படுகின்றது. இவ்வாறான விளம்பரங்களை கட்டுப்படுத்துவது அல்லது தவிர்ப்பதுதான் மருத்துவத் துறைக்குச் சிறந்ததாகும் . இவை மட்டுமின்றி மக்கள் மத்தியில் ஆயுள்வேத மற்றும் மூலிகைப் பொருள்கள் தொடர்பான தவறான விளம்பரங்களும் பல்கிப் பெருகி வருகின்றன.

அதிகமான மக்கள் சித்த மற்றும் ஆயுள்வேத மருத்துவ முறைகளை நாடி செல்வதால் அது பற்றிய சரியான தெளிவு அறிவு இல்லாத நபர்கள் இவை பற்றிய விளம்பரப்படுத்தல்களை மேற்கொண்டு மக்களிடமிருந்து பண மோசடி செய்து கொண்டிருக்கின்றார்கள்.

உதாரணமாகக் கூறுவதாயின் ஆயுஷ் மருந்துகள் பதஞ்சலி சிகிச்சை முறைமை மையமாகக் கொண்டு அந்த பெயர்களில் பல்வேறு அழகு சாதன பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்டு விளம்பரப்படுத்தப்படுகின்றன. உண்மையில் அவை தரமானவையா என்பதை ஆராய்ந்து அறிந்த பின் அவற்றை மக்கள் நுகர வேண்டும்.

இந்த எல்லா காரணிகளுக்கும் பின்னால் இருக்கும் முக்கியமான விடயம் என்னவெனில் இலாப நோக்கமாகும். இலாப நோக்கத்துக்காக மக்களின் உடல் ஆரோக்கியத்தில் தீங்கு விளைவிப்பது உண்மையில் கண்டிக்கப்பட வேண்டிய விடயமாகும். இந்தப் பிரச்சினைகளுக்கான தீர்வு எனும் போது மக்களுக்கு முதலில் மருத்துவம் பற்றிய முறையான தெளிவை கொடுக்க வேண்டும். மருத்துவர்கள் விளம்பரபடுத்தல்களில் இருந்து விலக வேண்டும். மருத்துவர்கள் பரிந்துரைப்பது போன்ற விளம்பர படுத்தல்களை தடை செய்ய வேண்டும். மக்களிடம் ஊடக நுகர்வு பற்றிய சரியான தெளிவை புரிந்துணர்வை கொண்டு செல்ல வேண்டும். போலியான வாழ்க்கை முறைகளில் இருந்து அவர்களை மீட்டெடுக்க வேண்டும்.

**எஸ். அபிஷேகன்,**
ஊடகத்துறை மாணவன்,
இரண்டாம் வருடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.



# முன்பள்ளி திறந்துவைப்பு

(அஸ்ஹர் ஆதம்)

பொத்துவிலில் 'லிட்டில் பீ' என்னும் புதிய முன்பள்ளி பழைய பிரதேச சபை வீதியிலுள்ள புதிய கட்டடத்தில் பிரதேச செயலாளர் பிர்னாஸ் இஸ்மாயில் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பொத்துவில் பிரதேச செயலாளர் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினராக பொத்துவில் முன்பள்ளிகள் சம்மேளனத்தின் தலைவர் எம்.எஸ். அப்துல் மலிக் கலந்து கொண்டார்.

விசேட விருந்தினர்களாக முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆர். சித்தி ஜாஹிறா, ஓய்வு பெற்ற அதிபர் ஜனாப் காலிதீன், பொத்துவிலின் மூத்த உலமா கண்ணியத்திற்குரிய மௌலவி ஆதம்பாவா, பொத்துவில் பிரதேச செய லக சிறுவர் மகளிர் பிரிவு உத்தியோகத் தர்கள், கிராம சேவகர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் கலந்து கொண்டனர.

இந்த நிகழ்வில் மரம் நடுகை மற்றும் சிறுவர், சிறுமியரின் கலை கலாச்சார நிகழ்வுகளும் இடம்பெற்றன.

# யானை தாக்கி உயிரிழந்த பெண்ணின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைப்பு

(பாறுக் ஷிஹான்)

யானை தாக்குதலுக்கு ஆளாகிப் பலியாகிய குடும்ப பெண்ணின் சடலம் மரண விசாரணையின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நெய்னாகாடு வம்பியடி பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை (03) இரவு காட்டு யானை தாக்குதலில் பெண் ஒருவர் உயிரிழந்திருந்தார்.

கல்முனையில் இருந்து நிந்தவூர் அல்லிமூலை வழியாக இறக்காமம் பகுதிக்கு மோட்டார் சைக்கிளில் இரவு வேளை பயணம் செய்த பெண்ணே இவ்வாறு உயிரிழந்திருந்தார்.

இவ்வாறு உயிரிழந்தவர் இறக்காமம் பகுதி 9 ஆம் பிரிவைச் சேர்ந்த 43 வயதுடைய புஹாரி சரீப் விபானி என்ற 3 பிள்ளைகளின் தாயார் ஆவார்.

சடலம் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டு சம்மாந்துறை நீதிவான் நீதிமன்ற நீதிபதி த.கருணாகரனின் கட்டளையின் பிரகாரம் பிரதேச மரண விசாரணை அதிகாரி அப்துல் ஹமீட் அல் - ஜவாஹிர் மரண விசாரணை மேற்கொண்டார். பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

# சமூக பாதுகாப்பு ஓய்வூதிய விழிப்பூட்டல் நிகழ்வு

(எம். எப். நவாஸ் )

இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் அரச ஓய்வூதிய திட்டம் தொடர்பில் மாணவர்களுக்கான விழிப்பூட்டல் நிகழ்ச்சிகள் பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அகமது ஷாபிர் வழிகாட்டலிலும், உதவி பிரதேச செயலாளர் நஹீஜா முஸாபிரின் நெறிப்படுத்தலிலும் இடம்பெற்றது.

அந்த வகையில் அந்-நூர் மகா வித்தியாலய மாணவர்களுக்கான விழிப்பூட்டல் நிகழ்ச்சி இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் பிரதேச செயலக விடயப் பொறுப்பாளர் எம். எல்.நஜிமுடீனின் ஏற்பாட்டில் அந்-நூர் மகா வித்தியாலயத்தில் உதவி அதிபர் எம்.எச்.றமீஸ் தலைமையில் நடை பெற்றது.

இந்நிகழ்வில் வளவாளராக இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் அம்பாறை மாவட்ட இணைப்பதிகாரி எஸ்.டி.சுதாகரன், சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ.எம்.ஹமீட், திட்ட உதவி முகாமையாளர் எம்.எப்.நவாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.



# டில்லியில் காங்கிரஸ் செயற்குழு கூட்டம்: தேர்தல் வியூகம் குறித்து ஆலோசனை!



காங்கிரஸ் செயற்குழு கூட்டம் எதிர்வரும் 9 ஆம் திகதி டில்லியில் நடைபெறுகிறது.

தற்போதைய அரசியல் நிலவரம், ஜாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பு, 5 மாநில சட்டப்பேரவை தேர்தலில் பின்பற்ற வேண்டிய வியூகங்கள் குறித்து இதில் ஆலோசிக்கப்படவுள்ளன.

மாற்றியமைக்கப்பட்ட காங்கிரஸ் செயற்குழுவின் முதல் கூட்டம் ஹைதராபாத்தில் கடந்த மாதம் 16 ஆம் திகதி நடைபெற்றது.

இதில் 5 மாநில சட்டப்பேரவை தேர்தல் மற்றும் அடுத்தாண்டு நடைபெற உள்ள மக்களவை தேர்தலுக்கான வியூகங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டன.

இந்த நிலையில் காங்கிரஸ் செயற்குழு கூட்டம் டில்லியில் கட்சியின் தலைமை அலுவலகத்தில் எதிர்வரும் 9 ஆம் திகதி திங்கள்கிழமை நடைபெறவுள்ளதாக காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதில் தற்போதைய அரசியல் நிலவரம், ஜாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பு, 5 மாநில சட்டப்பேரவை தேர்தலில் பின்பற்றவேண்டிய வியூகங்கள் குறித்து ஆலோசிக்கப்படவுள்ளன.

சத்தீஸ்கர் மற்றும் ராஜஸ்தானில் ஆட்சியை தக்கவைக்கவும், மத்தியப் பிரதேசம், தெலங்கானா, மிசோரம் ஆகிய மாநிலங்களில் ஆட்சியை கைப்பற்றும் முயற்சியிலும் காங்கிரஸ் ஈடுபட்டுள்ளது.

ஜாதிவாரியான மக்கள் தொகை கணக்கெடுப்பு குறித்து இந்த கூட்டத்தில் ஆலோசிக்கப்படலாம் எனத் தெரிகிறது. இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு மக்கள் தொகை அடிப்படையில் உரிமைகள் அளிக்க வேண்டும் என காங்கிரஸ் கோரிக்கை விடுத்துள்ளது.

# நடிகர் விஷாலின் குற்றச்சாட்டு தொடர்பில் தணிக்கை குழு அதிகாரிகள் மீது வழக்கு!



ஆதிக் ரவிச்சந்திரன் இயக்கத்தில் நடிகர் விஷால் நடித்துள்ள மார்க் ஆண்டனி திரைப்படம் கடந்த மாதம் 15 ஆம் திகதி வெளியானது.

இந்த திரைப்படம் கடந்த மாதம் 28 ஆம் திகதி இந்தியில் வெளியிடப்பட்டது. இதற்காக தணிக்கை குழுவுக்கு 6.5 லட்சம் லஞ்சம் கொடுத்தேன் என நடிகர் விஷால் சமூக வலைதளம் வாயிலாக புகார் கூறினார்.

இதுதொடர்பாக உடனடியாக விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்க மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை உத்தரவிட்டது. இதன்படி சி.பி.ஐ. விசாரணை நடத்தி 3 இடைத்தரகர்கள் மற்றும் பெயர் குறிப்பிடாத தணிக்கை குழு அதிகாரிகள் மீது வழக்கு பதிவு செய்துள்ளது. இதுகுறித்து சி.பி.ஐ. தலைமை அலுவலகம் நேற்று வெளியிட்ட அறிக்கையில், திரைப்பட தணிக்கை குழு மற்றும் தனி நபர்களுக்கு எதிராக அண்மையில் புகார் எழுப்பப்பட்டது.

இந்த புகார் தொடர்பாக மும்பை உட்பட 4 இடங்களில் சோதனை நடத்தப்பட்டது. அப்போது முக்கிய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன.

இதன்பேரில் இடைத்தரகர்கள் மெரின் மேனகா, தீஜா ராம்தாஸ், ராஜன் ஆகியோர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு உள்ளது. பெயர் குறிப்பிடாத தணிக்கை குழு அதிகாரிகள் மீதும் வழக்கு பதிவு செய்யப்பட்டு இருக்கிறது. இதுதொடர்பாக தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகிறது என்று கூறப்பட்டுள்ளது.

# சந்திரபாபு நாயுடுவின் நீதிமன்ற காவல் நீடிப்பு

தெலுங்கு தேசம் கட்சித் தலைவர் சந்திரபாபு நாயுடுக்கு எதிர்வரும் 19 ஆம் திகதி வரை நீதிமன்ற காவலை நீடித்து விஜயவாடா லஞ்ச ஒழிப்பு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது. மேலும் இவரின் பிணை மனு மீதான விசாரணை மீண்டும் விசாரணைக்கு வர உள்ளது.

சந்திரபாபு நாயுடுவின் ஆட்சியின் போது திறன் மேம்பாட்டு நிதி ஒதுக்கீடு செய்ததில் 371 கோடி ரூபா முறைகேடு இடம்பெற்றுள்ளது என தற்போதைய ஜெகன் அரசு குற்றம் சாட்டியது.

இது தொடர்பாக சி.ஐ.டி. பொலிஸார் சந்திரபாபு நாயுடுவை கடந்த மாதம் 9 ஆம் திகதி கைது செய்திருந்தனர்.

# பிலிப்பைன்ஸ் படகுகளை தடுத்து நிறுத்தியது சீனா!




தென்சீனக்கடல் பகுதியில் பிலிப்பைன்ஸ் படகுகள் சீன கடற்படையால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன.

உலகின் பரபரப்பான வர்த்தக பாதைகளுள் ஒன்றான தென் சீனக்கடல் பகுதி முழுவதையும் சீனா உரிமை கொண்டாடி வருகின்றது.

ஏற்கனவே, பிலிப்பைன்ஸ், தாய்வான், மலேசியா போன்ற நாடுகளும் அதற்கு உரிமை கோருகின்றன.

இதனால் அங்கு நீண்ட காலமாக பிராந்திய மோதல் நீடித்து வருகின்றது.

அதன்படி அங்குள்ள ஷோல் பகுதியில் சில மிதக்கும் தடைகளை நிறுவி பிலிப்பைன்ஸ் படகுகளை சீனா தடை செய்தது.

ஆனால், கடந்த வாரம் பிலிப்பைன்ஸ் கடற்படையினரால் அந்த தடைகள் அகற்றப்பட்டன.

இந்த நிலையில் பிலிப்பைன்ஸ் நாட்டின் இரண்டு விநியோக படகுகளை கடற்படையினர் சர்ச்சைக்குரிய ஷோல் பகுதிக்கு அழைத்து சென்றனர்.

ஆனால், சீன கடற்படையால் அந்த படகுகள் தடுத்து நிறுத்தப்பட்டன. இதனால் அந்த பகுதியில் மீண்டும் பதற்றம் நிலவி வருகிறது. இது குறித்து பிலிப்பைன்ஸ் நாட்டின் பாதுகாப்புத்துறை அமைச்சர் கில்பர்டோ தெரிவிக்கையில், 'தென் சீனக்கடல் பகுதியில் சீனாவின் சர்ச்சைக்குரிய நடவடிக்கைகளுக்கு பதிலளிக்க பிலிப்பைன்ஸ் தயாராகவுள்ளது என எச்சரித்துள்ளார்.

# சிரியாவின் இராணுவ பயிற்சி முகாம் மீதான ஆளில்லா விமானம் தாக்குதலில் 100 பேர் பலி!






ஹோம்ஸ் நகரில் உள்ள சிரியாவின் இராணுவ பயிற்சி முகாம் ஒன்றின் மீது நடத்தப்பட்ட ஆளில்லா விமானம் தாக்குதலில் 100 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இந்த தாக்குதலில் பலர் காயமடைந் துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இராணுவ அதிகாரிகளின் பட்டமளிப்பு விழாவொன்று நடைபெற்றபோது, இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது குறிப் பிடப்படுகின்றது.

இதன்போது, குழந்தைகள் மற்றும் பெண்களும் உயிரிழந்துள்ளனர். வெடிபொருள் நிறைந்த ஆளிலில்லா விமானத்தினூடாக இலக்கு வைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இந்த தாக்குதலை சர்வதேச சக்திகளால் ஆதரிக்கப்படும் பயங்கரவாத குழுக்களால் மேற்கொள் ளப்பட்டுள்ளது என்று சிறிய இராணுவம் குற்றம் சாட்டியுள்ளது.

எவ்வாறாயினும், உள்நாட்டுப் போரில் அரசாங்கத்துடன் போராடும் கிளர்ச்சியாளர்கள் மற்றும் ஜிஹாதிகளிடமிருந்து இன்னும் இந்த தாக்குதலுக்கு உரிமைகோரப்படவில்லை என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.